**தவலம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தவலம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 484,580 தொகை பெறுமதியான கணினி மற்றும் நிழற்பிரதி இயந்திரம் என்பனவற்றை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 247,230 தொகைக் கான நூலகப் புத்தகங்களின் பெறுமதி யை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | பொது நூலகத்திற்காக கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 90,000 பெறுமதியான கபட்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனப்படுத்தப் பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணம் கணக்கீடு செய்யப் பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டின் பிடிபண வைப்புக்கள் ரூபா 278,389 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் மீதி மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை பங்களிப்பு கணக்கின் மீதி இடையே ரூபா 804,345 தொகைக்கான வித்தியாசம் காணப்பட்டது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | வர்த்தக தொடர் கட்டிடங்கள் வாடகைக்கு கொடுக்கும் போது பெற்றுக் கொள்ளப்படும் பிணை வைப்புக்கள் ரூபா 518,000 தொகை நடைமுறை பொறுப்புக்கள் என காட்டப்படாமல் நடைமுறைச் சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1,361,903 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலமாக காணப்படும் சமமின்மை ஆதலால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமல் வீரபான மெதஓவிட விளையாட்டுத் திடல் மற்றும் படஹேன வாராந்த சந்தை அபிவிருத்தி செய்வதற்காக ஸ்கவேடர் இயந்திரம் ஒன்றிற்காக ரூபா 84,840 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அங்கீகாரம் பெற்று கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றேன். |

**(ஈ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்பட்ட ரூபா 16,477 இற்கான தொங்கல் கணக்கு வரவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிழைகளை இனங்கண்டு கணக்குகள் சீராக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**(உ) இடையறாது நீடித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 ஆண்டு முதல் இடையறாமல் செயற்பாட்டு விளைவுகளில் பற்றாக் குறை காணப்பட்டமையால் அது சபையின் இடையறாது நீடித்தலுக்கு பாதகமாக தாக்குவது என அவதானிக்கப்பட்டது. | செயற்பாட்டு விளைவுகள் சாதகமான முறையில் பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**(ஊ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 11,831,131 தொகைக்கான கடன்பட்டோர் மீதியில் 03 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சை மிகைத்துள்ள கூட்டுத் தொகை ரூபா 3,276,636 தொகைக்கான 08 கணக்கு மீதிகள் அடங்கியிருந்தன. | கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 12,542,360 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதியில் 02 வருடங்கள் முதல் 03 வருடங்களை இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 2,652,557 தொகைக்கான 05 மீதிகள் அடங்கியிருந்தன. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(எ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29,564,782 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பந்தி 134 | சபையினால் தனது அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | பிரதேசம் வீதவரி அறவிடக் கூடிய அளவு முன்னேற்ற மட்டத்தில் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 570 மற்றும் 571(1) (2) | 02 வருடங்களை விட மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1,126,000 இற்கான 16 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,287,871 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 529,386 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 415,856 | 587,746 | 582,276 | 551,979 | 393,236 | 447,807 | 320,294 | 600,654 |
| வாடகை | 4,977,000 | 1,762,890 | 1,725,675 | 133,300 | 5,054,500 | 1,984,870 | 1,945,520 | 109,425 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 536,425 | 537,679 | 537,679 | 8,800 | 637,625 | 585,225 | 585,225 | 8,800 |
| ஏனைய வருமானங்கள் | 3,519,300 | 3,197,523 | 1,961,521 | 5,383,840 | 3,303,300 | 3,314,822 | 1,870,036 | 3,626,478 |
| | 9,448,581 | 6,085,838 | 4,807,151 | 6,077,919 | 9,388,661 | 6,332,724 | 4,721,075 | 4,345,357 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 10,431,195 தொகையாக இருந்ததுடன், அறவீடுகள் ரூபா 4,807,151 தொகையாக காணப்பட்டமையால், வருமானம் சேகரித்தல் 46 சதவீதத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 2.2.3 வீதவரியும் வரியும்

### (அ) ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வருமானம் ரூபா 66,239 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்டவை ரூபா 3,046 தொகை எனப்படும் 4.5 சதவீதமாக காணப்பட்டமையால் ஏக்கர் வரி அறவீடு செய்வதில் பலவீன நிலைமை காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) குத்தகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மொத்த குத்தகை வருமானம் ரூபா 6,334,160 தொகையாக இருந்தது. ஆண்டின் போது சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா 635,970 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டின் வருமான அறவீடுகள் மொத்த வருமானத்தில் 10 சதவீதமாக இருந்தது. இதன் பிரகாரம் வருமானம் அறவிடுவதில் பலவீன நிலைமை காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(ஆ) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை வருமானம்

**கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மொத்த கடை வாடகை வருமானம் ரூபா 147,590 தொகையில் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டவை ரூபா 58,375 தொகையாக காணப்பட்டமையால், வருமானம் சேகரிப்பு 40 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,405,707 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 3,978,133 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## (அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,500,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது திட்டமிட்டுள்ளவாறு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் 03 வருடங்களுக்கு முன்னர் தெளிவான உரிமையொன்று காணப்படாத காணி ஒன்றிற்கு ரூபா 1,683,125 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த நிர்மாண வேலை 2017 இல் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக முற்றாக அழிந்தமையால் அதன் பின்னர் அச் செயற்திட்டம் கைவிடப்பட்டது. | குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். | குப்பை முகாமைத்துவத்திற்காகக நீண்ட காலத்திட்டம் ஒன்று எதிர்காலத்தில் செயற்படுத்துவேன். |
| (ii) | 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 வர்த்தமானி அறிவித்தல் மூலம் குப்பைகளை அகற்றுதல், சேகரித்தல், எடுத்துச் செல்லல் அத்தியவசிய தேவையொன்றாக ஆக்கப்பட்டு இருந்ததுடன், அதற்காக தனியாக அலகு ஒன்று நிறுவி நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அவ்வாறான வேலைத் திட்டம் ஒன்றிற்கு சபை இறங்கியிருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். | குப்பை முகாமைத்துவத்திற்காகக நீண்ட காலத்திட்டம் ஒன்று எதிர்காலத்தில் செயற்படுத்துவேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 58,069,162 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த தலைமை அலுவலக கட்டிடம் மற்றும் வாராந்த சந்தைக் கட்டிடம் அமைந்துள்ள காணிகளின் உரிமையை தீர்த்துக்கொண்டு இருக்கவில்லை. | காணிகளின் உரிமையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிமையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக் கப்பட்டுள்ள பதவிகளில் காணப்பட்ட 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 04 மிகை பதவியணியை முறைப்படுத் துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படு த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவிகள் முறைப்படுத் துவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) சபையில் கடமையாற்றி இறந்துள்ள, ஓய்வுபெற்ற, வேறு நிறுவனங்களுக்கு மாறிச் சென்றுள்ள, சேவையை வெறிதாக்கிய 16 ஊழியர்களின் கூட்டுத்தொகை ரூபா 120,988 இற்கான நிலுவை ஊழியர் கடன் மீதி மற்றும் 2018 மார்ச் மாதத்தில் சேவை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 150,670 இற்கான | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்ய வேண்டும். | நிலுவைக் கடன் மீதியை எதிர்கால த்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

கடன்மீதி 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜுலை 30 ஆந் திகதி உள்ளுராட்சித் திணைக்களத்தில் இருந்து ரூபா 102,290 தொகை பெறுமதியான கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் 02 தொகுதிகள் சபைக்கு வழங்கியிருந்த போதிலும், பெறுவனவுக் கட்டளை வழங்கி சபையின் பொருட் பதிவேட்டில் உட்படுத்தியிருந்தது ஒரு கணினியும் மற்றும் துணைக்கருவி தொகுதி ஒன்று மாத்திரமே. | சபைக்குக் கிடைத்துள்ள பொருட் பதிவேட்டுப் பொருட்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | தலைவருக்குப் பதிலாக கூட்டிணைப்புச் செயலாளரின் வீட்டில் இருந்து கடமைகள் மேற்கொள்கின்றேன். |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டின் போது ரூபா 999,990 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த மின்பிறப்பாக்கி இயந்திரம் 2017 மே மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக செயலிழந்துள்ளது. அதனை திருத்துவதற்காக 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி கேள்வி நடைமுறைக்கு புறம்பாக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கேள்வி நடைமுறைக்கு ஒத்ததாக திருத்த வேலைகளுக்கு வழங்க வேண்டும். | எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமல் குறைந்த தொகைக்கு திருத்த வேலை மேற் கொள்வதற்காக இந்த நிறுவனத்திற்கு ஒப்படைக் கப்பட்டதுடன் விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.3 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓட்ட நிலையில் இருந்து அகற்றப் பட்டிருந்த கப் வண்டி ஒன்று 2016 மே 07 திகதி முதலும் டிரக்டர் வண்டி ஒன்று 2017 மே 12 திகதி முதலும் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. | திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்ளப் பட வேண்டும். | சபையிடம் நிதி காணப்படாமையால் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாதிருந்தது. |

### 3.4.4 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது சபைக்கு வழங்கியிருந்த ரூபா 45,577,614 பெறுமதியான 07 வாகனங்கள் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குக் கிடைத்திருந்த வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தாக்கும் போது ஏற்படும் செலவுகளுக்காக சபையில் நிதி காணப்பட வில்லை. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 06 செலவு விடயங்களினல ரூபா 7,999,544 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அவை 21 சதவீதம் முதல் 89 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | ஒரு செலவு விடயத்தில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 2,090,959 தொகை அதாவது 85 சதவீதமாகும். | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | 04 வருமான விடயங்களில் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 19,618,027 காணப்பட்டதுடன், அப் பெறுமதி 23 சதவீதம் முதல் 80 சதவீத வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கண்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கை அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியை வினவி இருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பித் திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கை அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு வருடத்தில கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ஒரு தடவை மாத்திரம் கூடியிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்ப வேண்டும். | ஆண்டின் போது ஒரு தடவை மாத்திரம் கூடியதுடன் எதிர்காலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை செயற்படுவேன். |